15.03.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 20/2019</u>

அ.சா. 3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜலால் | | |
| த/பெ | அப்துல் ஜபார் | | |
| கிராமம் | டி.எடப்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | திருவெண்ணெய்நல்லூர் | வயது | 52/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது டிரைவர் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன அப்துல்ஜபார் எனது தகப்பனார் ஆவார். 27.06.2018ம் ஆண்டு அவர் அன்றும் எப்போதும் போல் விவசாயத்திற்காக காலையிலேயே டி.எடப்பாளையம் கிராமத்திற்கு நிலத்தில் உள்ள சொந்த வீட்டிற்கு சென்றார். எனக்கு அன்று மாலை 6.30 மணிக்கு என் தகப்பனார் இறந்துகிடப்பதாக தகவல் வந்தது. நான் சென்று பார்த்தேன். அதன் பின் வீட்டில் உள்ள அம்மா மற்றும் மற்ற நபர்களை கூப்பிட்டு கொண்டு நான் டி.எடப்பாளையம் வந்தேன். நான் அங்கு சென்று பார்த்த போது என் தந்தை ரத்த வெள்ளத்தில் காயங்களுடன் குப்புற கிடந்தார். அதன் பிறகு எனது பெரியப்பா ஜம்சுதீன் சென்று திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.</u>**